செயலாற்றுகை அறிக்கை - 2013

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

உள்ளடக்கம்

		பக்க இலக்கங்கள்
1.	தூர நோக்கு, பணிக்கூற்று மற்றும் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகள்	2-3
2.	2013 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை	
2.1	மேனோக்கு	4
2.2	சிறியமற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறைக்கானநிதியீடு	4-8
2.3	நுந்நிதியீடு	9-14
2.4	களஞ்சியசாலைவசதியும் சந்தைவலையமைப்பும்	14-15
2.5	உரமானியம், உயர் விவசாயவிளைச்சலுக்காக	15-19
2.6	உணவுப் பாதுகாப்பு	19-21
2.7	உணவுஏற்றுமதிப் பொருளாதாரத்தைநோக்கி	22-24
2.8	விவசாயிகளின் வருவாயைஉறுதிப்படுத்தல்	24-25
2.9	விவசாயிகளுக்கானசமூகப் பாதுகாப்பைஉறுதிப்படுத்தல்	25
3.	நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்	
3.1	அங்கீகாரம் வழங்கப்பட்ட பதவியணி	26
3.2	ஒழுங்கமைப்பு வரைபு	27
3.3	பணியாளர்களின் தகவல்கள்	28-29
3.4	உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்	30
3.5	வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகள், கல்விப் பயணங்கள், மற்றும் மாநாடுகள்	31
4.	நிதி தொடர்பான தகவல்கள்	32

தூர நோக்கு

“ பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்குடன் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள், நுண் தொழில் முயற்சிகள், வங்கியியல், மற்றும் நிதிச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கான வசதியளிக்கும் பிரதான அரச நிறுவனமொன்றாக மாறுதல். ”

பணிக்கூற்று

“ சிறிய மற்றும் நடுத்தர துறை தொழில் முயற்சிகள், நுண் தொழில் முயற்சிகள் துறை, வங்கியியல் துறை போன்றவற்றின் அபிவிருத்தி மற்றும், தொடர்புபட்ட நிறுவனங்களின் அவசியமான தலையீட்டினூடாக நிதிச்சந்தையை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கான நிதி வளங்களைத் திரட்டுவதற்கான பொருத்தமான கொள்கைகளையும் மற்றும் உபாயங்களையும் உருவாக்குதல். ”

திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

- நிதித்துறை அபிவிருத்திக்கும், அரசாங்கத்தின் அனுசரணையில் வழங்கப்படும் நிதி உதவித் திட்டங்களுக்கும் பொருத்தமான கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் உபாயங்களையும் உருவாக்குதல்.

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் நுண் நிதித் துறைகளின் அபிவிருத்திக்கான பிரதான பிரச்சினைகளை இனங்காணலும், அவற்றிற்கான தீர்வுகளை வழங்குதலும்.

- வங்கியியல், காப்புறுதி, சிறிய, நடுத்தர மற்றும் நுண் அளவிலான தொழில் முயற்சிகள் போன்றவற்றிற்கான சட்டங்ளை உருவாக்குவதற்கான வசதிகளை அளித்தல்.

- வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல், மற்றும் மீளாய்வு நடவடிக்கைகளை எடுத்தல், கொள்கைகளை வசதிப்படுத்துவதற்கான ஆய்வுகளை நடாத்துதல்.

- காலத்துக்குக் காலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தோற்றம் பெறும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசியமான கொள்கைகளை வகுப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

2. அபிவிருத்தி நிதி 2013

2.1 மேனோக்கு

சிறியமற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகள் முக்கிய மூலோபாயப் பிரிவாக எமது நாட்டில் அங்கீகரிக்கப்பட்டதோடு அவற்றினூடாகவேஉயர் பொருளாதாரவளர்ச்சியை எய்த முடிவதோடு, தொழிலின்மையைக் குறைப்பததோடு சமமின்மையையும் வறுமையையும் முடிவுக்குக் கொண்டுவரமுடிகிறது. சிறியமற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சித் துறையானது மொத்தத் தேசிய உற்பத்தியில் 30 சதவிகிதப் பங்களிப்பையும் தொழில் வாய்ப்புவழங்குதலில் 35 சதவிகிதப் பங்களிப்பையும் உற்பத்தித் துறையில் 30 சதவிகிதப் பங்களிப்பினையும் ஏற்றுமதித் துறையில் 20 சதவிகிதப் பங்களிப்பினையும் வழங்குகிறது. இத்துறைக்காக அரசுபல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கியுள்ளதோடு நிதித்துறையில் பிரவேசிப்பதற்கான வழிவகைகளையும் அடிப்படைக் கட்டமைப்புவசதிகளைச் செய்துகொடுத்ததோடு செயற்றிறனை அதிகரிப்பதற்காகவும் போட்டித்தன்மை,ஆக்கட்திறன் மற்றும் பெறுமதிசேர் பொருட்களைஉற்பத்திசெய்வதற்காகவும் தத்தமது திறன்களை விருத்திசெய்துகொள்வதற்காகவும் அரசுஉதவிசெய்துவருகிறது.

கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில் நுந்நிதியீடு அவர்களின் நிதித் தேவையைப் பெற்றுக் கொள்வதற்காகப் பாரியளவுதுணைபுரிந்துள்ளது. அரசநிதிநிறுவனங்களானசமுர்த்திவங்கிச் சங்கங்கள்,விவசாயவங்கிகள்,பிராந்தியஅபிவிருத்திவங்கி (RDB) போன்றவை நுந்நிதித் துறைக்குப் பாரியபங்களிப்பைச் செய்துள்ளன. மேலதிகநிதித் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து பெண்களுக்கான புதிய கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்துத்துறை அபிவிருத்திக்குமான புதிய திட்டங்கள்:
நாட்டின் பெரும்பாலானோர் நன்மை பெறும் வகையிலேயே அனைத்து அரசின் அபிவிருத்தித் திட்டங்களும் திட்டமிடப்பட்டுள்ளன. சந்தைப் பொருளாதாரத்தை நம்பி வாழ்கின்ற மக்களுக்கு சில சந்தா்ப்பங்களில் அது பயமையும் சில பிரதேசங்களில் அது பிரதிகூலங்களையும் வழங்குவதனால் அப்பகுதிகளை ஊக்குவிக்கும் பல்வேறு கைங்கரியங்களை அரசு செய்து வந்துள்ளது. சமூகத்தில் பல்வேறு தரப்பினரும் பயன் அடையும் வாகிலேயே அரசின் அனைத்து அபிவிருந்தித் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

- உத்தரவாத விலை, கிழங்கு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய் - *தன்னிறைவுக்கும் அப்பால் உற்பத்தி செய்யப்படுவதற்கு*
- உத்தரவாத விலை, விதை உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் போன்றவற்றுக்கு – *தன்னிறைவுக்கு அப்பால் உற்பத்தி செய்யப்படுவதற்ககு*
- உர மானியத்தினூடாகப் பயிர்க் காப்புதி – *பயிர் உற்பத்திக்கான பாதுகாப்பு*
- நிலப்பயன்தருதிறன் அபிவிருத்திக்கான ஊக்குவிப்புகள் சிறு தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு – *நிலத்தின் பலன் தரு திறனை ஊக்குவிப்பதற்காக*
- விவசாயிகள் காப்புறுதித் திட்டம் – *சமூக பாதுகாப்புக்காக*
- ஐந்து மாவட்டச் செயலகங்களுக்குச் சுற்றுநிதி, தானியக் கொள்வனவுக்காக – *விவசாயச் சந்தையை ஊக்குவிப்பதற்கான களமட்டத் தலையீடு*
- களஞ்சியசாலை வசதிகளை மேம்படுத்தல், நெல் பெரிய வெங்காயம், சோயா அவரை மற்றும் ஏனைய தானியங்களுக்கு – *உணவுப் பாதுகாப்புக்காக*
- ஐரோப்பிய முதலீட்டு வங்கியினூடாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிக்கான கடன் – *ஏற்றுமதி அபிவிருத்திக்கும் சக்தி வளப் பாதுகாப்புக்கும்.*
- "லிய இசுறு" கடன் திட்டம் பெண் – *முயற்சியாளர்களுக்காக இலகுவில் கடன் வழங்குவதற்காக*
- வா்த்தக மட்டத்திலான விலங்கு அபிவிருத்திக் கடன் – *பாலுற்பத்தியில் தன்னிறைவை நோக்கி*
- உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அரிசி அன்பளிப்பு – *மேலதிக உற்பத்தியை னிதாபிமான உதவிகளுக்காக பகிர்வதற்கு*

2.2 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான நிதியீடு

2.2.1 உள்ளூர் வங்கிகளின் நிதியீடு

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளுக்கான நிதி வசதிகளை வழங்கல் அரசின் பிரதான அபிவிருத்தி உபாயங்களில் ஒன்றாக இன்றும் இருந்து வருகின்றது. 2013 ஆம் ஆண்டில் சிறிய

மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக அரச மற்றும் தனியார் துறை வணிக அபிவிருத்தி வங்கிகளினால் சுமார் 546383 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் வங்கிகள் சிறிய மற்றம் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கும் நிறுவனங்களாக மட்டும் செயல்படாது அவற்றுக்கு அரச வழிகாட்டல்களுக்கு இணங்க ஆலோசனை வழங்கும் நிறுவனங்களாகவும் செயற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 1 - 2013 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்பட்ட கடன்கள்

வங்கி	விவசாயம்		கைத்தொழில்		சேவைகள்		ஏனையவை		மொத்தம்	
	கடன்கள்	பெறுமதி (ரூ.மில்)	கடன்கள்	பெறுமதி (ரூ.மில்)	கடன்கள்	பெறுமதி (ரூ.மில்)	கடன்கள்	பெறுமதி (ரூ.மில்)	கடன்கள்	பெறுமதி (ரூ.மில்)
இலங்கை வங்கி	26	221.92	152	761.64	93	626.70	157	601.23	428	2,211.49
மக்கள் வங்கி	87,655	6,066.00	2,242	4,668.00	2,094	1,224.00	544,183	141,408.00	636,174	153,366.00
பிரதேச அபிவிருத்தி வங்கி	21,313	3,146.00	15,282	2,642.00	22,643	4,095.00	7,651	2,283.00	66,889	12,166.00
லங்கா புத்ர வங்கி	16	30.53	48	185.78	14	83.26	12	23.32	90	322.89
சுனச அபிவிருத்தி வங்கி	330	67.50	209	213.90	184	33.70	136	27.80	859	342.90
தேசிய அபிவிருத்தி வங்கி	812	2,196.00	3,808	9,290.00	582	1,000.00	2,182	3,014.00	7,384	15,500.00
DFCC வங்கி	125	619.90	351	2,275.30	995	3,980.60	110	591.50	1,581	7,467.30
கொமர்ஷல் வங்கி	2,847	10,208.00	20,791	124,265.00	5,985	20,238.00	8,640	26,812.00	38,263	181,523.00
சம்பத் வங்கி	5,969	9,502.00	28,304	31,525.00	5,444	15,969.00	8,386	22,257.00	48,103	79,253.00
செலான் வங்கி	472	1,062.99	1,227	3,009.99	1,259	2,182.54	5,494	8,568.38	8,452	14,823.90
ஹட்டன் நஷனல் வங்கி	3,769	4,207.54	2,332	8,138.23	6,672	21,802.70	1,298	2,247.63	14,071	36,396.10
நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கி	128	424.56	477	1,109.44	1,389	3,542.85	7,154	9,168.42	9,148	14,245.27
யூனியன் வங்கி	90	705.00	2,450	14,996.00	481	10,678.00	332	2,387.00	3,353	28,766.00
மொத்தம்	**123,552**	**38,457.94**	**77,673**	**203,080.28**	**47,835**	**85,456.35**	**585,735**	**219,389.28**	**834,795**	**546,383.85**

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்

வணிக மற்றும் அபிவிருத்தி வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்பட்ட கடன்களில் துறை ரீதியாக 2013 ஆம் ஆண்டு விவசாயத் துறை 7 வீதத்தையும் கைத்தொழில் துறை 37 வீதத்தையும் சேவைத் துறையானது 16 வீதத்தினையும் ஏனைய துறைகள் 40 வீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதைக் காணலாம்.

அரச வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகளுக்கு கடன் வழங்குவதற்கு என்றே அர்ப்பணிக்கப்பட்ட வங்கிச் சேவைகளை வழங்கி வருகின்றன. பிராந்திய ரீதியில் இவ்வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிசயாளர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களுடைய முயற்சியாண்மைத் திறன்களை கட்டியெழுப்புவதிலும் பாரிய பங்களிப்புகளைச் செய்து வருகின்றன.

அட்டவணை 2 - சிறிய மற்றும் நடுத்தர வங்கி நிலையங்களின் வளர்ச்சி 2012-2013

வங்கி	உருவாக்கப்பட்ட வங்கி நிலையங்கள்		வழங்கப்பட்ட கடன்கள்			
			கடன்களின் தொகை		தொகை (ரூபா.மில்.)	
	2012	**2013**	**2012**	**2013**	**2012**	**2013**
இலங்கை வங்கி	10	4	197	233	1,048.63	873.30
மக்கள் வங்கி	6	11	1,524	2,431	2,616.54	4,582.51
பிரதேச அபிவிருத்தி வங்கி	2	9	31	543	44.70	412.76
மொத்தம்	**18**	**24**	**1,752**	**3,207**	**3,709.87**	**5,868.57**

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்





2.2.2 பால் உற்பத்திக்கான அபிவிருத்தி நிதி – பால் உற்பத்தியின் தன்னிறைவை நோக்கி

நன்கு முகாமைத்துவம் செய்யப்பட்டதொரு பாற்பண்ணை

பால் உற்பத்தியின் தன்னிறைவை எய்துவதற்கான தேசியக் கொள்கையினை வெல்வதற்காக மத்திய வங்கி அறிமுகப்படுத்திய பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம் 2013 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பதின்மூன்று பங்கேற்பு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் அமுல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் பிரதான நோக்கம் வருடாந்த பால் உற்பத்தியை 75 மில்லியன் லீற்றராக உயர்த்துவதாகும். அத்தோடு 1,000 பாரிய பாற் பண்ணைகளை அமைத்து ஒவ்வொன்றுக்கும் குறைந்தது 25 கறவைப் பசுக்களை வழங்கி நடுத்தர பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்துப் பால் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதேயாகும். இதனூடாகப் பாவிப்புக்கு ஏற்ற தரிசு நிலங்களை உபயோகித்து பால்பண்ணை வர்த்தக ரீதியான விநியோக சங்கிலியில் ஒரு அங்கமாகத் திகழ்வதே பிரதான குறிக்கோலாகும். அதனூடாகப் பாற் பண்ணை பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பால் பதப்படுத்துவோர் போன்றோரை ஒன்றிணைத்து பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்பை வழங்குவது மற்றுமொரு குளிக்கோளாகும். இத்திட்டம் சிறிய மற்றும் நடுத்தர பாற்பண்ணைத் தொழிலில் வர்த்தக ரீதியாக ஈடுபடுவோருக்கு வசதியளிக்கும்.

அட்டவணை 3 - பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டம் 2013 டிசம்பர் 31 வரையிலான முன்னேற்றம்

பங்கேற்பு நிதி நிறுவனங்கள் (PFI)	பயனாளிகள் தொகை	கடன் தொகை (ரூ.மில்)
இலங்கை வங்கி	6	13.9
மக்கள் வங்கி	8	41.7
பிராந்திய அபிவிருத்தி வங்கி	11	15.2
ஹற்றன் ந'னல் வங்கி	13	40.5
கொமர்ியல் வங்கி	7	15.9
சம்பத் வங்கி	3	30.4
னுகுஊஊ வங்கி	1	4.0
தேசிய அபிவிருத்தி வங்கி	1	8.8
செலான் வங்கி	11	31.8
மொத்தம்	**61**	**202.2**

மூலம் : பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2.2.3 சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறைக்கான வெளிநாட்டு உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்தி வசதிகள் திட்டம் (SMEDeF)

குறிப்பாக மேற்படி திட்டம் மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. கடன், நட்ட அச்சத்தைப் பகிர்ந்து கொள்ளல் வசதி, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகளுக்கான திறன் விருத்தி என்பனவே அவையாகும். 2013 ஆம் ஆண்டு இறுதியில் 387 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு 2952 மில்லியன் ரூபா பங்கேற்பு நிதி நிறுவனங்களினூடாக வழங்கப்பட்டது. இது ஒதுக்கப்பட்ட தொகையில் 97 வீதமாகும். 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 18 மாவட்டங்களைச் சேர்ந்த 80 முயற்சியாளர்களுக்கு 612 மில்லியன் ரூபாய்களைக் கடனாக வழங்கியுள்ளது. இக்கடன்களில் 65 வீதமானவை 5 மில். ரூபாவுக்கும் 30 மில்லியன் ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையாகும். இத்திட்டத்தின் பிரதான நோக்கமாக 23 துறைகளுக்குக் கடன் வழங்குவது காணப்பட்டாலும் கடந்த வருடம் 13 துறைகளுக்கு மாத்திரமே கடன் வழங்கப்பட்டது. இக்கடன் தொகையில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட தொகை விவசாயப் பதனிடல், சுற்றுலாத்துறை, தைத்த ஆடையுற்பத்தி, மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு வழங்கப்பட்டது. விவசாயத் துறைக்கும் உற்பத்தித் துறைக்குமே அதிகளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பிரதான மாவட்டங்களில் வசிக்கும் தொழில் முயற்சியாளர்களை விடப் பின்தங்கிய மாவட்டங்களில் வசிப்போருக்கே கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் 59 சதவீதமான கடன்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி தவிர்ந்த ஏனைய 13 மாவட்டங்களுக்கே வழங்கப்பட்டது. எனினும் இதே காலப்பகுதியில் 147 மில்லியன் ரூபா கொழும்பு மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை அபிவிருத்தி வசதிகள் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட காளான் மற்றும் பொலிசெக் கம்பனிகள்

மொத்தமாக 3.8 அமெரிக்க டொலர்கள் சம்பந்தப்பட்ட ஊழியர்களையும் தொழில் முயற்சியாளர்களையும் பயிற்றுவிக்கச் செலவு செய்யப்பட்டது. 2013 இல் மாத்திரம் 3029 பேரும் மொத்தமாக 7,536 பேரும் குறிப்பிட்ட கடன் திட்டம் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

சிறியமற்றும் நடுத்தரத் தொழிற்துறை அபிவிருத்தித் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கு வலுவூட்டுவதற்காக இலங்கையில் ஜேர்மன் குடியரசுடன் இணைந்து செயற்பாட்டு ஒப்பந்தமொன்று 2012 ஜூன் மாதமளவில் சைச்சாத்திடப்பட்டது. இருநாடுகளும் ஒன்றிணைந்து 2,785 மில்லியன் யூரோக்களை ஜேர்மன் சர்வதேசஒத்துழைப்புநிறுவனத்துடன் (GIZ) இணைந்து சிறியமற்றும் நடுத்தரத் தொழில் துறை வளர்ச்சிக்காகவழங்கியது. இவ்வபிவிருத்தித் திட்டத்தின் பிரதானநோக்கம் நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத முன் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து சிறியமற்றும் நடுத்தரத் தொழில் துறையைஅபிவிருத்திசெய்வதாகும். இத்திட்டமானது பிரதான மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. சிறியமற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிக்கான கொள்கைத் திட்டமொன்றை வகுத்தல்
2. தொழில்நுட்பத்துக்கான வழிகளை உறுதிப்படுத்தல்
3. நிதித்துறைக்கான வழிகளை மேம்படுத்தல்

2013 இல் செய்யப்பட்டபிரதானசெயற்பாடுகள்

- அனைத்துச் சம்பந்தப்பட்டதரப்பினருடனும் கலந்துரையாடிசிறியமற்றும் நடுத்தரத் தொழிற்துறைக்கான“தேசியகொள்கைத் திட்டம்”ஒன்றுவகுக்கப்பட்டது.
- சிறியமற்றும் நடுத்தரத் தொழிற் துறைதொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்பாடுசெய்யப்பட்டன.
- தொழில்நுட்பப் பரிமாற்றஅபிவிருத்திநிதி (TTDF) ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடுகைத்தொழில் துறைமற்றும் சேவைத் துறைகளில் வியாபாரஅபிவிருத்தியை இலக்காகக் கொண்டுஅவைஏற்படுத்தப்பட்டன.
- பல்கலைக்கழக வியாபாரத் தொடர்புத் திட்டம் உலக வாசனைத் திரவியச் சந்தைக் கேள்விக்கும் வாசனைத் திரவியஏற்றுமதியாளர்களுக்குமிடையில் காணப்படுகின்ற இடைவெளியைநிரப்புவதற்காகஏற்படுத்தப்பட்டது.
- சிறியமற்றும் நடுத்தரஉணவுப் பொருட்கள் பதனிடுவோருக்காக தகைமை அதிகரிப்புநிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டன.
- அரச-தனியார் துறைகளுக்கிடையிலான கலந்துரையாடல்கள் பிராந்திய,தேசியமட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டன.
- பாற்பண்ணைஉற்பத்தியாளர்களின் வருமானத்தை 50 வீதத்தினால் அதிகரிப்பதற்காகவும் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் சாவகச்சேரியில் பாற்பண்ணை அபிவிருத்திநிலையம் ஒன்றுநிர்மாணிக்கப்பட்டது.
- சிறியமற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளுக்கு நிதிவசதிகளைவழங்குவதற்காக பல வங்கிகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.
- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்துடன் ஒன்றிணைந்து புதிய கணக்கீட்டுநியமங்கள் பற்றிசிறியமற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டன.

பசுமை சக்திக்கும் ஏற்றுமதிக்குமான புதிய வசதிகள்

2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் உள்ளூர் முயற்சியாளர்களை ஊக்குவித்து அவர்களின் உற்பத்திப் பொருள்களை பாரிய சந்தைகளான இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், சவுதி அரேபியா, கட்டார், ரஷ்யா, தென்னாபிரிக்கா, பிரேசில் மற்றும் அமெரிக்க ஐரோப்பிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. இதற்காக அரசு ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB) யுடன் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 90 மில்லியன் யுரோக்களுக்கான (17 மில்லியன் ரூபா) சலுகைக் கடன்களைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இத்தொகை பசுமை சக்திகளை உற்பத்தி செய்யவும் மீள் புதுப்பிக்கக் கூடிய சக்தி முயற்சிகளை ஆரம்பிக்கவும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு வசதியளிக்க பயன்படுத்தப்படவிருக்கிறது.

இக்கடன் தொகையைப் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக பங்கேற்பு நிதி நிறுவனங்களாக DFCC வங்கி, கொமர்ஷியல் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி என்பன பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. மொத்தக் கடன் தொகையில் 70 சதவீதம் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளுக்கும் எஞ்சிய 30 சதவீதம் பசுமை சக்தி உற்பத்தி செய்வதற்கான தகவுடைய திட்டங்களுக்கும் வழங்கப்படும். பயனாளிகள் தங்களது கருத்திட்டங்களை ஆகக் குறைந்தது 100,000 யுரோக்களுக்குக் குறையாமலும் 25 மில்லியன் யுரோக்களை விடக் கூடாமலும் முன் வைக்க வேண்டும். மேலும் தகவுடைய கருத்திட்டங்களுக்கான செலவில் 50 சதவீதத்திற்கு அரச நிதியிடுவதோடு வட்டி வீதம் 8 வீதத்திற்கு மேற்படாமல் காணப்படும். வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான வட்டி வீதம் 5 வீதமாகவும் காணப்படும். மொத்தக் கடன் தொகையில் மூன்றிலொரு பகுதி வெளிநாட்டு நாணயக் கடனாகவும் எஞ்சிய நிதி ரூபாய்க் கடனாகவும் வழங்கப்படும்.

2.3 நுந்நிதியீடு

கடந்த பல தசாப்தங்களாக கிராமியப் பொருளாதாரத்தில் பல மாற்றங்களை நுண் நிதியியல் துறை செய்துள்ளது. இத்துறைக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தி மிகவும் வறுமையுற்றவர்களுக்கும் வசதி குறைந்தவர்களுக்கும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசு பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது. அரசு காலத்துக்குக் காலம் அரச வங்கிகளின் ஊடாகக் கிராமிய மக்களுக்குப் பல விரிவாக்கல் கடன் திட்டங்களை அமுலாக்கி வருகின்றது. நுண் நிதிப்பாய்ச்சலானது வாழ்வாதார மட்டத்தை அடைவதற்குப் பெண் முயற்சியாளர்கள் உருவாவது அவசியம். இதனை மையமாகக் கொண்டே 2013 ஆம் 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டங்களில் அரசு பாரிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்து வந்துள்ளது.

சுய தொழில் முயற்சிகளுக்காகப் பெண்களை ஊக்குவித்தல்

2013 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறுவோரை மையமாக வைத்துப் பல அரச தலையீட்டுடனான நுண் நிதிக் கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அட்டவணை 4 - நுண் நிதி நிறுவனங்களின் முன்னேற்றம்

நுண் நிதியீட்டு நிறுவனங்கள்	கிளைகளின் எண்ணிக்கை	வைப்பாளர்களின் எண்ணிக்கை	கடன்களின் எண்ணிக்கை	மொத்த வைப்பு (ரூபா.மில்)	மொத்த முதலீடு (ரூபா.மில்)	மொத்த கடன் (ரூபா.மில்)
சமுர்த்தி அதிகார சபை	1,073	8,528,862	5,362,009	45,848	50,840	98,066
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்	2,080	7,927,655	1,514,412	152,610	66,772	34,969
கமநல அபிவிருத்தித் திணைக்களம்	532	226,521	366,947	268	2,213	4,030
பிராந்திய அபிவிருத்தி வங்கி	265	4,854,047	1,278,107	62,647	14,754	54,710
லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி	8	33,764	4,439	228	5,412	743
இலங்கை அபிவிருத்தி வங்கி	4	175	5,535	130	1,743	1,320
மொத்தம்	**3,962**	**21,571,024**	**8,531,449**	**261,731**	**141,734**	**193,838**

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்

மேலே தரப்பட்ட அனைத்து நிதி நிறுவனங்களும் சேமிப்பினூடாகவோ கடன் வழங்கலினூடாகவோ மக்களுக்கு நிதிச் சேவைகளைச் செய்து வருகின்றன. கடன் வழங்கலின் மொத்தப் புரள்வான 194 மில்லியன்களில் ஆகக் கூடுதலான கடன் வழங்கலாக 98 மில்லியன்களை சமுர்த்தி வங்கியும் அதற்கடுத்தபடியாக 54 மில்லியன்களைப் பிராந்திய அபிவிருத்தி வங்கியும் 34 மில்லியன்களை கூட்டுறவு அபிவிருத்தி வங்கிகளும் வழங்கியுள்ளன. சமுர்த்திப் பயனாளிகளுக்கான நிதி அவர்களுடைய சேமிப்புக் கணக்குகளினூடாக வழங்கப்படுவதனால் அவர்களுக்கு சேமிப்புப் பழக்கத்தையும் நுண் கடன் வழங்கலையும் ஊக்குவிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டிலே ஏழைகளின் சேமிப்பு 262 மில்லியன் ரூபாய்களையும் தாண்டியிருப்பதை 12.8 ஆம் அட்டவணை காட்டுகிறது. ஆயினும் மேற்படி வங்கிகள் நுண் நிதித்துறையில் 142 மில்லியன் ரூபாய்களை நீண்டகால மற்றும் குறுகிய காலக் கடன்களாக முதலீடு செய்துள்ளன.



2013 ஆம் ஆண்டு இலங்கையின் முறைசார் வங்கிகள் நுண் நிதித்துறைக்கு சுமார் 39 மில்லியன் ரூபா பெறுமதியான கடன்களை வழங்கியுள்ளன. அவற்றுள் 17 மில்லியன் ரூபா சனச அபிவிருத்தி வங்கியினூடாகவும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பன முறையே 10 மில்லியன், 5 மில்லியன் ஆகவும் கடன்களை வழங்கி குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செலுத்தியுள்ளன. இவை புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட விரிவான கிராமியக்கடன் திட்டத்தின் கீழும் வறுமை ஒழிப்பு நுண் நிதித்திட்டம் மற்றும் “சௌபாக்யா” எனப்படும் கடன் திட்டடத்தின் கீழேயே வழங்கப்பட்டன. அரச வங்கிகளுடன் ஒப்பிடுகையில் கொமர்ஷல் வங்கி மற்றும் ஹட்டன் நெசனல் வங்கி என்பனவே மிகக் கூடுதலான பங்களிப்புக்களை நுண் நிதித்துறைக்கு வழங்கியுள்ளது.

“லிய இசுறு”– சிறிய வியாபாரத்துக்காக பெண்களுக்கான கடன் திட்டம்

கிராமியப் பெண்களுக்கான வலுவூட்டல் திட்டம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பானது பிரதான இடத்தை வகிக்கின்றது. குறிப்பிடத்தக்களவு வீதமான பெண்கள் தமக்கென ஒரு வியாபாரத்தைச் செய்வதோடு அதனூடாக தரமான பொருட்களை உற்பத்தி செய்து பலருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதோடு குடும்பத்துக்கு சிறந்த வருவாயையும் தேடிக் கொள்கின்றனர். ஆயினும் இன்னும் சில பெண்கள் நிதி நெருக்கடி காரணமாகத் தமக்கென சிறந்ததொரு தொழிலைத் தேடிக் கொள்வதில் அல்லல் படுகின்றனர். கடன் பெறுவதற்குத் தேவையான பிணை, முறையான பின்னூட்டல் அதிகளவிலான கைம்மாற்றல் செலவு போன்றவற்றினால் சிறு வியாபாரங்களை ஆரம்பிப்பதில் பாரிய இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். நுண் நிதிச்சந்தையிலே கடன்களுக்கான கேள்விக்கும் நிரம்பலுக்குமிடையெ பாரிய இடைவெளியொன்று காணப்படுகிறது. குறிப்பாக பெண்கள் கடன் பெறுவதில் பாரிய இடர்பாடுகள் காணப்படுகின்றன. சிறிய நிதி நிறுவனங்கள் பெண்கள் கடன் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் எனவும் கூறுகின்றனர்.

இதற்கிணங்க 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் “லிய இசுறு” கடன் திட்டம் முன் மொழியப்பட்டுள்ளது. முயற்சியாண்மையுடைய பெண்களுக்கு வட்டியற்ற பிணையற்ற கடன் திட்டமாக இது அமுல்படுத்தப்படுகிறது. இது 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிராந்திய அபிவிருத்தி வங்கியினூடாக அதிகாரமளிக்கப்பட்டு அரசு சார்பாகப் பெண் முயற்றியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட சந்தை வசதிகள்

பெண் வியாபார முயற்சியாளர்களுக்கு தங்களுக்கென வர்த்தகத் திட்டமொன்றோ அல்லது இலாபந் தரக்கூடிய வர்த்தகமொன்றைக் கொண்டு நடத்தும் பெண்களுக்கோ எதுவித வட்டியோ அல்லது பிணையோ இன்றி வழங்கப்படும். இத்திட்டத்தின் அடிப்படையில் நடைமுறையிலுள்ள வியாபாரத்தைக் கொண்டு செல்லவோ அல்லது பதிய வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கோ பிராந்திய அபிவிருத்தி வங்கியினூடாக 250,000 ரூபா பல்வேறு வர்த்தக முயற்சிகளுக்காக கடன் வழங்கப்படும். 2014 ஆம் ஆண்டு சுமார் 3,350 மில்லியன் ரூபாய்கள் 13,400 பெண் வர்த்தக முயற்சியாளர்களுக்கு நாடளாவிய ரீதியில் எதுவித நிபந்தனைகளுமின்றி வழங்கப்படவுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக பயிற்சி பெறாதோர் வெளிநாடு செல்வதால் ஏற்படும் பல்வேறுபட்ட சிக்கல்களைக் குறைத்து சுயதொழிலில் ஈடுபடுவதனால் மேலதிக வருவாயை ஈட்டும் முயற்சிக்குக் கைகொடுக்கும் வகையிலேயே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமது நாளாந்த குடும்ப நடவடிக்கைகளைக் கண்காணிப்பதோடு சொந்தத் தொழிலும் ஈடுபட்டு குடும்ப வருவாயை அதிகரித்துக கொள்வது இத்திட்டத்தினூடாகப் பெண்கள் பெறும் வரப்பிரசாதமாகும். இதே போன்று ஏனைய நிதி நிறுவனங்களும் திவி நெகும திட்டத்தைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு 25,000 ரூபா பெறுமதியான கடன்கள் எதுவித பிணையுமின்றி வழங்கி உதவி புரியவுள்ளன.

புதிய விரிவான கிராமியக் கடன் திட்டம் (NCRCS)

மேற்படி திட்டமானது ஏழைகளுக்கு நாடாளாவிய ரீதியில் கடன்களை வழங்கி அவர்களது வருமான வழிகளை உயர்த்துவதற்காக உருவாக்கப்பட்டதொரு விசேட திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் குறுகியகாலக் கடன்கள் பங்கேற்பு நிதிநிறுவனங்களினூடாக (PFI) அவர்களது சொந்த நிதியிலிருந்து வழங்கப்படும். குறிப்பாக விவசாயிகளுக் 32 வகையான பயிர்களுக்கு இத்திட்டத்தினூடாகக் கடன் வழங்கப்படும். அவையாவன நெல், மிளகாய், வெங்காயம், எண்ணெய்த் தாவரங்கள், வேர்த் தாவரங்கள், இஞ்சி, தானியங்கள் மற்றும் காய்கறி வகைகளை உற்பத்தி செய்வதற்காகவே இக்கடன் வழங்கப்படும். பங்கேற்பு நிதி நிறுவனங்கள் விவசாயிகளுக்கு தமது சொந்த நிதியிலிருந்து 9 வீத வட்டிக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் அதேவேளை அவ்வட்டித் தொகையில் 6 வீதத்தை மானியமாக அரசு அந்நிதி நிறுவனங்களுக்கு வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2013 இல் வழங்கப்பட்ட கடன்கள் பற்றிய விபரம் அட்டவணை 12.9 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 5 - NCRCS திட்டத்தின் கீழ் கடன் விநியோகம் - 2013

பயிர்	ஏக்கருக்கான அதி கூடிய கடன் தொகை (ரூபா)	அதி கூடிய பரப்பளவு (ஏக்.)	வழங்கப்பட்ட கடன் தொகை	கடன் பெறுமதி ரூபா (மில்.)	காணியின் பரப்பளவு (ஏக்.)
நெல் - நீர்ப்பாய்ச்சிய மழை நீர்	25,000 15,000	10	60,706	4,393.91	217,927.23
சோளம்	65,000	10	7,491	397.71	17,419.72
உருளைக்கிழங்கு	175,000	2	5,008	934.90	5,883.58
வெங்காயம்	95,000	2	14,853	1,894.59	25,231.59
செத்தல் மிளகாய்	65,000	2	3,137	167.70	4,627.26
காய் கறி வகை	20,000 - 90,000	2	3,277	268.39	5,057.04
ஏனையவை, இஞ்சி	70,000	2	1,909	105.95	3,374.58
மொத்தம்			**96,381**	**8,163.15**	**279,522.00**

மூலம் இலங்கை மத்திய வங்கி

சோளம், மிளகாய்ப் பண்ணை NCRCS கடன் திட்டத்தின் கீழ்

2013 ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் ஓர் ஏக்கருக்கு 25,000 ரூபாவாக கூடுதலாக நெல் விவசாயத்திற்கே வழங்கப்பட்டது. இது மொத்தக் கடன் தொகையில் 53 சதவீதம் ஆகும். வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விவசாயிகள் மொத்தத் தொகையில் முறையே 25 சதவீதத்தினையும் 11 சதவீதத்தினையும் இத்திட்டத்தின் கீழ் கடனாகப் பெற்றுள்ளனர். அத்தோடு 2013 ஆம் ஆண்டில் 280,000 ஏக்கர் நிலம் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டதோடு இதில் 78 சதவீதம் நெல் வேளாண்மைக்காக ஈடுபடுத்தப்பட்டதோடு நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்காக அரசு பல்வேறு உதவிகளையும் செய்து வருகிறது.

அட்டவணை 6 - NCRCS கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் வசதிகள் 2010 - 2013

பயிர்ச் செய்கைக் கடன்கள்	2010	2011	2012	2013
வழங்கப்பட்ட கடன்கள்	71,973	98,568	112,413	96,381
விநியோகிக்கப்பட்ட தொகை (ரூ.மில்)	3,564.5	6,456.2	9,359.8	8,188.8
காணிப்பரப்பளவு (ஏக்கர்)	202,754	309,561	355,993	279,21
வட்டி மானியம் (ரூ.மில்)	131.8	220.5	341.8	249.5

மூலம் : இலங்கை மத்திய வங்கி

NCRCS கடன் திட்டத்தின் கீழ் சராசரியாக 6892 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாயக் கடன்கள் ஒவ்வொரு ஆண்டும் 94834 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசு தொடர்ந்தும் பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு 235.9 மில்.ரூபா வட்டி மானியமாக வருடாந்தம் செலுத்தி வருகிறது.



2013 ஆம் ஆண்டிலே ஆகக் கூடுதலான கடன் தொகையாக 2607.68 மில்லியன் ரூபா யாழ்ப்பாண மாவட்டத்திலே 17,600 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதோடு யுத்த கால நிலைமைகளின் பின்னர் கடன் தொகைகளை பெருமளவில் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் அனுராதபுர மாவட்டத்தையும் அம்பாந்தோட்டை, பொலனறுவை மாவட்டங்களையும் விட யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பிடத்தக்களவு கூடுதலான விவசாயிகள் கடன் தொகைகளைப் பெற்றுள்ளனர்.

வரைபு 5 - பயிர் வாரியாகக் கடன் வழங்கல் 2013



இம்மானியக் கடன் வழங்கும் திட்டமானது கிராமிய மட்ட விவசாய உற்பத்திகளை ஊக்குவித்ததோடு நெல் உற்பத்தியானது மொத்தத் தொகையில் 63 வீதத்தை ஆக்கிரமித்ததோடு பெரிய வெங்காயம் சோளம் என்பனவும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு இப்பொருட்களின் இறக்குமதிக்காகச் செலவிடப்படும் பாரிய அந்நிய செலாவணித் தொகை மீதப்படுத்தப்பட்டது.

சமூகரீதியில் ஒன்றிணைக்கப்பட்டபயிற்சியாளர்களுக்கானகடன் வசதிகள்

2012 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் சமூகரீதியில் ஒன்றிணைக்கப்பட்டோருக்கான சுயதொழில் வாய்ப்புக் கடன்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவ்வாறுபயிற்சிபெற்றவர்கள் சமூகத்தில் சிறந்தபிரஜைகளாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்காகவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தைஉயர்நதுவதற்காகவும் இக்கடன்கள் வழங்கப்பட்டன. இக்கடன் திட்டத்தின் கீழ் புனருத்தாரனம் செய்யப்பட்ட இளைஞர்களுக்கு 250,000 ரூபாவரையிலானகடன்கள்,விவசாயஉற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் பால் பண்ணைத் தொழிலுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் மற்றும் மீன் பிடித்துறை, விவசாய விரிவாக்கல் துறை, சிறியமற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறைகளில் ஈடுபடவும் இக்கடன்கள் வழங்கப்பட்டன.

மேற்படி கடன் திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக முத்தரப்பு ஒப்பந்தமொன்று நிதியமைச்சு கடன் பெறுனர், ஆதனங்களுக்கும் கைத்தொழிலுக்குமான அதிகார சபை (REPPIA) மற்றும் அரசவங்கிகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டன. இக்கடன் திட்டத்திற்கு இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை சேமிப்புவங்கி ஆகியன நிதியளிப்புக்களைச் செய்தன. இதன் முதல் கட்டமாக 300 மில்லியன் ரூபாய்கள் உரியகடன் பெறுனர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கடன்களுக்கான வட்டித் தொகையான 12 வீதத்தில் 4 வீதத்தைக் கடன் பெறுனரும் எஞ்சிய 08 வீதத்தை அரசும் மானியமாக வங்கிகளுக்கு வழங்கின.

அட்டவணை 7 - 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களின் வளர்ச்சி

மாவட்டம்	வழங்கப்பட்ட கடன்கள்	கடன்களின் பெறுமதி
யாழ்ப்பாணம்	288	48,336,000
கிளிநொச்சி	342	51,984,000
முல்லைத்தீவு	428	77,760,000

வவுனியா	307	47,025,000
மன்னார்	268	48,250,000
மட்டக்களப்பு	56	8,235,000
திருகோணமலை	70	14,050,000
அம்பாறை	9	1,450,000
ஏனைய மாவட்டங்கள்	5	1,150,000
மொத்தம்	**1,773**	**298,240,000**

மூலம் : மக்கள், சொத்துக்கள், தொழிற்சாலைகள் மறுசீரமைப்பு அதிகார சபை

1,773 கடன்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் 2013 ஆம் ஆண்டிலே பெற்றனர். இவர்களுள் 555 பயிற்சிபெற்று வெளியேறியோர் சிறியமற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். முல்லைத் தீவு மாவட்டத்திலிருந்து மட்டும் 428 பேர் இக்கடன்களைப் பெற்று நன்மையடைந்துள்ளனர். இதற்காகஅரசு 23 மில்லியன் ரூபாய்களைப் பங்கேற்பு நிதிநிறுவனங்ககளுக்காக வட்டிமானியமாக 2013 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. 23.01.2014 இல் நடைபெற்றஅமைச்சரவைக் கூட்டத்தில் இரண்டாம் கட்டக் கடன் வழங்கலை அங்கீகரித்துள்ளது. இதனூடாக 4,724 பேர் பயன் பெற்று சமூகத்தோடு இணையவுள்ளனர்.

2.4 சந்தை வலையமைப்பும் களஞ்சியசாலை வசதியும்

அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களையும் தானியங்களையும் சேமித்து வைப்பதற்கு களஞ்சியசாலை விரிவுபடுத்தல் அத்தியவசியமாகும். அதனடிப்படையில் நெல் சந்தைப்படுத்தும் சபை, அரசாங்க அதிபர்கள்/மாவட்ட செயலாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக களஞ்சியசாலைகளை நிர்மாணிப்பதற்கும் தற்போதுள்ள களஞ்சியசாலைகளை திருத்தியமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் மாத்திரம் நெல் சந்தைப்படுத்தும் சபையானது 144 மில்லியன் ரூபாய்களை இதற்காகச் செலவு செய்துள்ளது. நெல் 228,610 மில்.மெ.தொன்களை களஞ்சியப்படுத்துவதற்கான கொள்ளளவு வசதிகள் தற்போது காணப்படுகின்றன. மேலும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கீழுள்ள களஞ்சியசாலைகளைப் புனரமைக்க 75 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டன.

அட்டவணை 8 - நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியசாலை வசதி

ஆண்டு	களஞ்சியசாலைகளின் எண்ணிக்கை	களஞ்சிய வசதி (மெ.தொ)
2008	51	51,000
2009	141	156,545
2010	184	217,960
2011	194	212,441
2012	210	221,415
2013	219	228,610

மூலம் : நெல் சந்தைப்படுத்தும் சபை

அனுராதபுர மாவட்டத்தில் ஒயாமடுவவிலும் கம்பஹா மாவட்டத்தில் மரதகஹமுலவிலும் புதிதாகக் களஞ்சியசாலைகள் நிர்மாணிக்கப்பட்டன. அங்கே 74,000 மெ.தொ உணவுப் பொருட்களை சேமித்து வைக்கலாம். மரதகஹமுல களஞ்சியசாலையானது விவசாயிகளையும், வியாபாரிகளையும் அரிசி ஆலைச் சொந்தக்காரர்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு இடமாகவும் காணப்படுவதோடு நகர்ப்புறங்களுக்கு அரிசியை விநியோகிக்கும் பிரதான மாநகர சந்தையாகவும் காணப்படுகிறது.

புதிதாக அமைக்கப்பட்ட பண்டகசாலைத் தொகுதிகள்

அட்டவணை 9 - நெல் களஞ்சிய வசதிகள் 2013-12-31 வரை

நிறுவனம்	களஞ்சிய வசதி (மெ.தொ)
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்	13,820
உணவு அபிவிருத்தித் திணைக்களம்	55,170
நெல் சந்தைப்படுத்தும் சபை	228,610
மகாவலி அபிவிருத்தி சபை	12,500
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்	
அனுராதபுரம் (ஓயாமடுவ)	16,000
கம்பஹா (மரதகஹமுல)	50,000
அம்பாறை (உத்தேச)	10,000
மொத்தம்	**386,100**

மூலம் : அபிவிருத்தி நிதித் திணைக்களம்

ஏனைய உப உணவுப் பொருட்களுக்கான பண்டகசாலைகளை விஸ்தரிப்பதிலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன. அறுவடைக் காலங்களின் போது அதிகளவில் அறுவடை செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு வரும் போது விலைகள் பெரும்பாலும் வீழ்ச்சியடைகின்றன. இவ்வாறான கட்டங்களில் விவசாயிகள் உற்பத்திப் பொருட்களுக்குக் குறைந்த விலையையே பெற நேரிடுகிறது. இப்பிரச்சினையை அணுகும் முகமாகவே களஞ்சிய சாலை வசதிகளை அதிகரிப்பதற்காக சமூக மட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் விவசாயிகளுக்கு சந்தைக்குத் தேவையான உற்பத்திப் பொருட்களை மட்டும் விநியோகிக்கக் கூடியதாகவிருக்கிறது. கிராமிய மட்டத்துக்குத் தேவையான பெரிய வெங்காயம் களஞ்சியப்படுத்துவதற்காக 4145 மெ.தொ கொள்ளளவைக் கொண்ட களஞ்சியசாலைகள் மாத்தளை, அனுராதபுரம், பொலனறுவை மற்றும் குருணாகல் போன்ற மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டன. அதேவேளை சோயா அவரை, சோளம் போன்றவற்றுக்கான 10,000 மெ.தொ கொள்ளளவைக் கொண்ட களஞ்சிய சாலையொன்று அனுராதபுர மாவட்டத்திலுள்ள ஹுருளுவெவ என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 10 - ஏனைய பயிர்களுக்கான களஞ்சிய வசதிகள்

பயிர்	மாவட்டம்	கொள்ளளவு	செலவு (மில்.ரூபா)
பெரிய வெங்காயம் (வீட்டு மட்டத்தில்)	மாத்தளை	1,905	25.15
